# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 211/ந/2017

ஆணை எண். 37/2018

நாள் : 28/02/2018

திரு S. கோவிந்தன்,
பழனி – 624 601. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
மேலூர் நகராட்சி,
மேலூர். – எதிர் மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், பழனி, புதுதாராபுரம், எண்.635, டாக்டர் திருமலை நகர் முகவரியில் வசிக்கும் திரு S. கோவிந்தன், அவர்களின் 27.10.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 30.10.2017 அன்று பெறப்பட்டு, 211/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக மேலூர் நகராட்சி ஆணையரின் அறிக்கைப் பெறப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், பழனி, புதுதாராபுரம், எண்.635, டாக்டர் திருமலை நகர் முகவரியில் வசிக்கும் திரு S. கோவிந்தன், என்பவர் தான் மேலூர் நகராட்சியில் பணிபுரிந்த காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி, 5–வது ஊதியக்குழு வித்தியாசத் தொகை மற்றும் வட்டித் தொகையினை I, II மற்றும் III கணக்குப் பட்டியலின்படி வழங்க ஆவண செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்திருந்தார். மேற்குறிப்பிட்ட முறையீடு சம்பந்தமாக மேலூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. 07.12.2017 நாளிட்ட கடிதத்தில் மேலூர் நகராட்சி ஆணையர் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். முறையீட்டு மனுதாரரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதிக்கான வட்டித் தொகை வழங்கக்கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் W.P.(MD)7099/2016 எண்ணிட்ட நீதிப்பேராணையினை தாக்கல் செய்துள்ளதாகவும் அவ்வழக்கு சம்பந்தமான எதிர்வாதுரை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப்பிரிவு 10 (3) (b)–இன் படி நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவத்தால் விசாரணை மேற்கொள்ள இயலாது. எனவே, சேமநலநிதிக்கான வட்டி சம்பந்தமான சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை W.P.(MD)7099/2016 எண்ணிட்ட நீதிப்பேராணையில் வழங்கப்படவுள்ள தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மேலூர் நகராட்சி ஆணையருக்கு இம்முறை நடுவம் ஆணையிடுகிறது. மேலும், முறையீட்டு மனுதாரருக்கு 5–வது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நிலுவைத் தொகை ஏதேனும் வழங்கப்படவேண்டியிருப்பின் அத்தொகையினை வழங்க பரிசீலிக்குமாறும் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 28–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
மேலூர் நகராட்சி,
மேலூர்,
மதுரை மாவட்டம்.

2. திரு S. கோவிந்தன்,
636, டாக்டர் திருமலை நகர்,
புது தாராபுரம் சாலை,
பழனி – 624 601.
திண்டுக்கல் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்